



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






வெள்ளி ❖ பிப்ரவரி. 25, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 5 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 141 ❖ ரூ.5


### போர் தொடங்கியதால் உக்ரைனில் இருக்கும் இந்தியர்களின் நிலை என்ன?

# கவலை

## உக்ரைனில் தற்போது நிலைத்தன்மையற்ற, எது வேண்டுமானாலும் நடக்கும் சூழல் நிலவுகிறது. எனவே, இங்குள்ள இந்தியர்கள் அமைதி காத்து, பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தல்

**கியூ, பிப். 25:**

**உக்ரைன்நாட்டில்ரஷ்யா ராணுவத் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில் அங்குள்ள சுமார் 22 ஆயிரம் இந்தியர்களின் நிலைமை குறித்த கவலை எழுந்துள்ளது.**



கல்வி, வேலை மற்றும் வர்த்தகம் தொடர்பாக சுமார் 22 ஆயிரம் இந்தியர்கள் உக்ரைனில் இருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கிருந்து இந்தியா திரும்புவதற்கு விமான சேவை ஏதும் இயக்கப்படவில்லை. உக்ரைனில் இருக்கும் இந்தியர்கள் தங்களது விபரங்களை இந்திய தூதரகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இருப்பினும் பெரும்பாலானோர் தங்களது விபரங்களை அளிக்கவில்லை என்று தகவல்தெரியவந்துள்ளது. உக்ரைனில் இருக்கும் இந்தியர்களை விமானப்படை மூலம் மீட்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், அங்கிருக்கும் சூழல் குறித்து இந்திய தூதரகம் முக்கிய அறிவுறுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

உக்ரைனில் தற்போது நிலைத்தன்மையற்ற, எது வேண்டுமானாலும் நடக்கும்சூழல்நிலவுகிறது. எனவே, இங்குள்ள இந்தியர்கள் அமைதி காத்து, பாதுகாப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வீடுகள், விடுதிகள், தங்குமிடங்கள் மற்றும் பயணத்தில் இருப்போர் தங்களது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளளவும். மேற்கு உக்ரைன் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தலைநகர் கீவிற்கு இந்தியர்கள் வருவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர்கள் அனைவரும் தற்காலிகமாக, தாங்கள் இருந்த பகுதிக்கே திரும்பிச் சென்றுவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பாகஉக்ரைனின் மேற்கு எல்லைப் பகுதிக்கு செல்வதன் மூலம் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். முக்கிய தகவல்களை இந்திய தூதரகம் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. தற்போது, உக்ரைனில் தங்கியுள்ள இந்தியர்களுக்கு உதவ வெளியுறவுத்துறை அமைத்துள்ள 24×7 உதவி மைய எண்கள் 1800118797, +91 11 23012113, +91 11 23014104, +91 11 23017905 ஆகிய எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.


இதற்கிடையே, உக்ரைனில் வசிக்கும் தமிழர்கள் தனது மின்னஞ்சலை தொடர்பு கொள்ளுமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா கூறியுள்ளார். இதுதொடர்பாக அவர் தனது ட்விட்டர் பதிவில், "உக்ரைன் போர் சூழலில் உதவி தேவைப்படும் தமிழர்களுக்கு இந்தியத் தூதரகம்வழியாகவிரைந்து உதவிடும்படி முதல்வர் உத்தரவிட்டுள்ளார். எனவே உதவி தேவைப்படும் உக்ரைன் வாழ்தமிழர்கள் தொடர்பு கொள்க : mm.abdulla@sansad.nic.in'' என்று கூறியுள்ளார்.

# சாலைமறியலில் ஈடுபட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாருக்கு ஜாமின் வழங்கி நீதிமன்றம் உத்தரவு

சென்னை , பிப். 25:

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று திமுக பிரமுகர் நரேஷ் என்பவரை அரை நிர்வாணத்துடன் கைகளை கட்டி அடித்து ஊர்வலமாக இழுத்துச் சென்ற சம்பவத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் மீது கொலை மிரட்டல் விடுத்தல், ஆபாசமாக பேசுதல், ஆயுதங்களைப் பயன்படுத்துதல், உள்ளிட்ட 8 பிரிவுகளின் கீழ் தண்டையார்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கடந்த 21ம் தேதி இரவு பட்டினம்பாக்கயிலுள்ள அவரது வீட்டில் காவல் கிழக்கு இணை ஆணையர் பிரபாகர் மற்றும் மாதாவரம் துணை ஆணையர் சுந்தரவதனம் ஆகியோர் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் சென்று ஜெயக்குமாரை கைது செய்தனர். பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பூந்தமல்லி சிறையில் அடைத்தனர். அதனைத்தொடர்ந்து ஜெயக்குமார் மீது உள்ளாட்சித் தேர்தல் நாளன்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.



அத்துமீறி சாலை மறியலில் ஈடுபட்டதாக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் உட்பட 110 அதிமுகவினர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகளான 188- அரசு அதிகாரியின் உத்தரவை மதிக்காமல் இருத்தல், 269- உயிருக்கு ஆபத்தான தொற்றுநோய் பரப்பக்கூடிய செயல், 270- உயிருக்கு ஆபத்தான தொற்றுநோய் பரப்பக்கூடிய தீய எண்ணத்திலான செயலில் ஈடுபடுதல் மற்றும் காவல் சட்டம் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஜாமின்கோரி அமைச்சர் ஜெயக்குமார் தாக்கல் செய்த ஜாமின் மனு நேற்று ஜார்ஜ் டவுன் 16-வது குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வழக்கை விசாரித்த நீதிமன்றம், போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கில் ஜெயக்குமாருக்குஜாமின் வழங்கி உத்தரவிட்டது. இருப்பினும், தி.மு.க நிர்வாகியை அரை நிர்வாணப்படுத்தி இழுத்துச் சென்ற வழக்கில் ஜாமின் வழங்கப்படாததால் ஜெயக்குமார் தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டியுள்ளது.

# தஞ்சாவூர் சோழாஸ் ரோட்டரி சங்கம் மற்றும் அபூர்வசாமி அறக்கட்டளை இணைந்து நடத்திய முப்பெரும் விழா

தஞ்சாவூர், பிப்.25-

தஞ்சாவூர் சோழாஸ் ரோட்டரி சங்கம் மற்றும் அபூர்வசாமி அறக்கட்டளை இணைந்து சோழாஸ் ரோட்டரி சங்க குடும்ப விழா, சிறப்பாக சேவை புரியும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் திலகம் விருது வழங்கும் விழா மற்றும் ரோட்டரி தினம் ஆகிய முப்பெரும் விழா தஞ்சையில் நடைபெற்றது.



இந்த விழாவிற்கு தஞ்சாவூர் சோழாஸ் ரோட்டரி சங்கத் தலைவரும், வழக்கறிஞருமான விவியன் அசோக் தலைமை வகித்தார். துணை ஆளுநர் பெலிக்ஸ் சுந்தர் முன்னிலை வகித்தார், பொறுப்பாளர் சந்தான சாமி வரவேற்றார், சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கல்வி அலுவலர் குழந்தை ராஜன் கலந்துகொண்டு 7 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் திலகம் விருதை வழங்கி பாராட்டி பேசினார். அப்போது பெண்கள் கிறிஸ்துவ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை அனிதா பிரீமிளா பூரணிக்கு முதலாவதாக விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி உதவி தலைமை ஆசிரியை எலியாஸ், புதுமாத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியை மாலதி, ஒரத்தநாடு தூய மரியன்னை நடுநிலை பள்ளி இடைநிலை ஆசிரியர் ஸ்டெல்லா மேரி, கோவிலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் இராஜு, சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் காசிராணி, தஞ்சாவூர் அரசர் தொடக்கப்பள்ளி (சத்திரம் நிர்வாகம்) இடைநிலை ஆசிரியர் சூசைமேரி ஆகிய 7 பேருக்கும் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்து விருது பெற்ற ஆசிரியர்கள் சார்பில் அனிதா பிரீமிளா பூரணி ஏற்புரையாற்றினார். இதற்கான ஏற்பாடுகளை ரோட்டரி சங்க தலைவரும், வழக்கறிஞருமான விவியன் அசோக், செயலாளர் இலக்குமண சாமி, பொருளாளர் நாகராஜன் மற்றும் நிர்வாகிகள் செய்து இருந்தனர், நிறைவாக செயலாளர் இலக்குமணசாமி நன்றி கூறினார்.

# செங்கல் சூளை வியாபாரிக்கு ஓவர் நைட்டில் அடித்த லக் – கையில் இப்போது ரூ.1 கோடி

**மத்தியப்பிரதேச பிப்.25–**

மத்தியப்பிரதேசத்தில் செங்கல் சூளை வியாபாரிக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான வைரம் கிடைத்துள்ளது.



வாழ்க்கையில் அதிசயம் அற்புதம் எல்லாம் எல்லாருக்கும் தினமும் நடக்குமா என்ன? ஆனால் அந்த எதிர்பார்ப்பு நம் அனைவருக்குமே இருக்கத்தான் செய்கிறது. அப்படி மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த செங்கல் சூளை வியாபாரி ஒருவருக்கு ஓவர் நைட்டில் கிக்கான லக் அடித்தி ருக்கிறது.

ஆம். மத்தியப் பிரதேசத்தின் பன்னா மாவட்டத்தைச் சேர்ந்த சாதாரண செங்கல் சூளை வியாபாரி சுஷில் சுக்லா ஒரே இரவில் கோடீஸ்வரர் ஆகிவிட்டார். கிட்டத்தட்ட 20 வருடமாக செங்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறது சுக்லாவின் குடும்பம். கிஷோர்கன்ச் பகுதியில் வசித்துவரும் சிறு வியாபாரியான சுக்லா, கிருஷ்ண கல்யாண்பூர் அருகே ஆழமற்ற சுரங்கத்தை தோண்டும் பணியில் ஈடுபட்ட போது, அவருக்கு 26.11 காரட் மதிப்புள்ள வைரம் கிடைத்துள்ளது. இதன் மதிப்பு ஒரு கோடிக்கும் மேல் எனத் தெரிய வந்துள்ளது. இதில் அரசுக்கான ராயல்டி மற்றும் வரி போக, எஞ்சிய தொகையாக கிட்டத்தட்ட ரூ.1.20 கோடி சுஷில் சுக்லாவுக்கு கிடைக்கவுள்ளது.

பன்னா மாவட்டத்தில் இதுபோன்ற சம்பவம் நடப்பது புதிதல்ல கடந்த ஆண்டு 7 விலையுயர்ந்த வைரக்கற்கள் இதே மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### புதுக்கோட்டையில் பாஜக சார்பில்

# வாக்காளர்களுக்கு நன்றி கூறி இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி

**புதுக்கோட்டை பிப்.25–**

தமிழகத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் 532 வாக்குகளைப் பெற்றும் வார்டு எண் 18 ல் மல்லிகா -193 வாக்குகள் பெற்றும் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியாக மக்களால் அங்கிகரிக்கப்பட்டதை அடுத்து வாக்காளர்களுக்கு நன்றி சொல்லும் நகர் வலம் நிகழ்ச்சி நடைபெற்றது.




இந்நிகழ்ச்சி புதுக்கோட்டை மாவட்ட பாரதிய ஜனதா கட்சி துணைத் தலைவர் மதுசூதனன் தலைமையில், நகர தலைவர் சுப்பிரமணியன் நகர பொதுச்செயலாளர் லட்சுமணன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தோல்வியால் துவண்டு விடவில்லை என்பதை மக்களுக்கு தெரிவிப்பதற்காக தோல்வியிலிருந்து மீண்டு வருவோம் பாராளுமன்றத் தேர்தலுக்காக மீண்டும் வருவோம் என்பதை பிரச்சார பாடல் மூலம் தெரிவித்து வாக்காளர்களுக்கு வீதி வீதியாக சென்று நன்றி கூறி இனிப்புகள் வழங்கினார்கள்.

நிகழ்வில் புதுக்கோட்டை நகர பாரதிய ஜனதா கட்சி துணைத் தலைவர்கள் ரவிக்குமார், வனஜா, ராமதாஸ், நகரச் செயலாளர் மதன்குமார், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகப் பிரிவு மாவட்ட செயலாளர் கார்த்திகேயன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் நாகராஜன், மற்றும் சம்பந்தப்பட்ட வார்டுகளின் வேட்பாளர்கள், கிளைத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற பெரிய அரசியல் கட்சிகளே நன்றி தெரிவிக்காத நிலையில் பாரதிய ஜனதா கட்சியின் இந்த நடவடிக்கையை மக்கள் வரவேற்றனர்.

# குன்றாண்டார் கோவில் வட்டார வளமையத்தில் தன்னார்வலர்களுக்கு கல்விக் கண்காட்சி

**புதுக்கோட்டை, பிப்.25–**

புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சாமி.சத்தியமூர்த்தி வழிகாட்டலின்படி இல்லம்தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு குன்றாண்டார்கோவில் வட்டார வளமையத்தில் இரண்டாம்கட்டப்பயிற்சி மற்றும்கல்விக் கண்காட்சி நடைபெற்றது.



கல்விக் கண்காட்சியினை தொடங்கி வைத்து குன்றாண்டார்கோவில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஆ. அனிதா தன்னார்வலர்களிடம் பேசினார்.

கீரனூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் முருகன், ஒடுகம்பட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராஜராஜன், இல்லம் தேடி கல்வி திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி ஆகியோர் தன்னார்வலர்களை வாழ்த்திப் பேசினர்.


கண்காட்சியின் நடுவர்களாக கீரனூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் அ.கஜேந்திரன், எம்.எஸ். ஜெயின்ராஜ், கீரனூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் கிளாரா, சுமதி, ஸ்ரீபிரியா, ஒடுகம்பட்டி மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் புனிதா, சரவணநாதன் ஆகியோர்செயல்பட்டனர்.

கண்காட்சியில் ஒடுகம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, கீரனூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குளத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய குறுவள மையத்திற்குட்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். கண்காட்சிக்கான ஏற்பாடுகளை குன்றாண்டார்கோவில் வட்டார வளமைய பயிற்றுநர்கள் ராஜா, மஞ்சு, மாரியம்மாள், சுரேஷ், பெரியசாமி மற்றும் மோசக்குடி நடுநிலைப் பள்ளி தலைமைஆசிரியர் பாலகிருஷ்ணன், இல்லம் தேடிக்கல்வித் திட்ட ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயராம், சவரிராஜ், ஆசிரியர் ஜெயக்குமார் ஆகியோர்செய்திருந்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்










| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,827 | Rs.5,193 |

## வரலாற்றில் இன்று



1956 பனிப்போர்: சோவியத் தலைவர் நிக்கிட்டா குருசேவ் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சிக்கால நிர்வாகத்தை விமர்சனம் செய்தார்.

1964 வட கொரியாவின் பிரதமர் கிம் இல்-சுங் நிலமானிய நில உரிமையை நீக்குவதாக அறிவித்தார், இதன் மூலம் அனைத்துக் கூட்டுறவுப் பண்ணைகளும் அரசின் நிருவாகத்தின் கீழ் வந்தது.

1968 வியட்நாம் போர்: வியட்நாமில் 135 ஆ மை கிராம மக்கள் தென் கொரியப் படையினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

1980 சூரினாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.

1986 பிலிப்பீன்சு தலைவர் பேர்டினன்ட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து தமது 20-ஆண்டு ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ அரசுத்தலைவர் ஆனார்.

1988 மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணை பிரித்வி ஏவப்பட்டது.

1991 வளைகுடாப் போர்: ஈராக்கிய ஸ்கட் ஏவுகணை ஒன்று சவூதி அரேபியாவின் டாகுரான் நகரில்ல் அமெரிக்க இராணுவத்தளத்தில் வீழ்ந்து வெடித்ததில் 28 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

1991 பனிப்போர்: வார்சா ஒப்பந்த அமைப்பு கலைக்கப்பட்டது.

1992 அசர்பைஜானின் நகர்னோ-கரபாக் பகுதியில் ஆர்மேனிய இராணுவத்தினர் 613 குடிமக்களைப் படுகொலை செய்தனர்.

1994 மேற்குக் கரை நகரான எபிரோனில் பிதாப்பிதாக்களின் குகை மசூதியில் இசுரேலியர் ஒருவர் சுட்டதில் 29 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டு 125 பேர் காயமடைந்தனர். ஆத்திரமடைந்த பாலத்தீனர்கள் கொலையாளியை அடித்துக் கொன்றனர். இதனையடுத்து நிகழ்ந்த வன்முறைகளில் 26 பாலத்தீனர்களும் 9 இசுரேலியர்களும் கொல்லப்பட்டனர்.

2006 உலகின் மக்கள் தொகை 6.5 பில்லியனைத் தாண்டியது.

2007 ஈசாவின் ரோசெட்டா விண்ணுளவி முதன் முதலாகச் செவ்வாய்க் கோளை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சிற்கு அப்பால் எறியப்பட்டது.

## தஞ்சாவூரில் அதிமுகவினர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாளையொட்டி அவரது உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



தஞ்சாவூர் பிப்.25-

அதிமுக பொதுச் செயலாளரும் முன்னாள் முதல்வருமான ஜெயலலிதாவின் 74 வது பிறந்தநாளை தமிழகம் முழுவதும் அதிமுக கட்சியினர் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர், அதேபோல் தஞ்சாவூரில் ரயிலடி பகுதியில் உள்ள ஜெயலலிதாவின் முழு உருவவெண்கலச்சிலைக்கு மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திருஞானம் தலைமையில் முன்னாள் மேயர்சாவித்திரிகோபால், ஆவின் தலைவர் காந்தி உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திபொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

மேலும் முன்னாள் மேயர் சாவித்திரி கோபால் தஞ்சை 23 வது வார்டு பகுதியில் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி அன்னதானமும் வழங்கினார், இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் அறிவுடைநம்பி புண்ணியமூர்த்தி ரமேஷ் மற்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிமுக கவுன்சிலர்கள் கோபால் மணிகண்டன் சரவணன் காந்திமதி தெட்சிணாமூர்த்தி கேசவன் கலையரசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள்தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வாக்குப்பதிவு இயந்திரக் கிடங்கினை, திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிவராசு, இந்திய தேர்தல் ஆணைய உத்தரவினை தொடர்ந்து நேற்று மாதாந்திர தணிக்கை செய்தார், தணிக்கையின் போது தேர்தல் தனி வட்டாட்சியர் முத்துச்சாமி உடனிருந்தார்.

## உளுந்தூர்பேட்டையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாள் விழா



கள்ளக்குறிச்சி, பிப்,25_

தமிழகம் முழுவதும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்த நாளை முன்னிட்டு அதிமுகநிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள், ஜெயலலிதாவின் திருவுருவ சிலை மற்றும் திரு உருவ படத்திற்கு மலர்தூவி பிறந்தநாள் விழாவை கொண்டாடினர், மேலும் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்,இதன் ஒரு பகுதியாக,

கள்ளக்குறிச்சிமாவட்டம், உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் திருவுருவச்சிலைக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான குமரகுரு தலைமையில் மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது, இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது நகர செயலாளர் துரை, ஒன்றிய செயலாளர் மணிராஜ், முன்னாள் ஒன்றியக்குழு துணைத்தலைவர் சாய்ராம் மற்றும்கழகத்தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



▶ திண்டுக்கல் ஆர்.வி.எஸ் பொறியியல் கல்லூரியில் திண்டுக்கல் மாவட்ட அரசு துறை அலுவலர்களுக்கு பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் சார்பில், 37 நாட்கள் நடைபெறும் அடிப்படை பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் விசாகன் நேற்று துவக்கி வைத்து பேசினார். அருகில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய கணக்கு அலுவலர் ரவி, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய ரஷீத் அலி, திண்டுக்கல் ஆர்.வி.எஸ் பொறியியல் கல்லூரி இயக்குனர் கிருஷ்ணகுமார் உட்பட பலர்உள்ளனர்.




## அதிமுகவில் தற்போது தலைமையே கிடையாது முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு பேட்டி



சென்னை பிப்.25-

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை கே.கே நகரில் உள்ள எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா சிலைகளுக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்பு செய்தியாளர்களிடம் பேசியவர், "நகர்ப்புற உள்ளாட்சிதேர்தலில் பண பலம், கூட்டணி பலம், அதிகார பலம் தான் திமுக வென்றதற்கு காரணம். ஜெயலலிதா இல்லாமல் முதல் முறையாக அதிமுக தனித்து களம் கண்டது.

அதிமுகவில் தலைமையே கிடையாது. இப்போது, இருப்பவர்களை கட்சியை வழிநடத்த நாங்கள் உருவாக்கி வைத்துள்ளோம். அதிமுகவின் தோல்விக்கு காரணம் என்ன என்பது குறித்து பேசி முடிவு எடுப்போம்.அதிமுகவாக்கு வங்கி குறையவில்லை. வாக்களிக்க வேண்டிய மக்கள் வாக்களிக்க வரவில்லை. திமுக ஆட்சி மீது உள்ள விரக்தியில் மக்கள் முழுமையாக வாக்களிக்கவில்லை. அதிமுக, திமுகவில் இணைந்துவிடும் என அமைச்சர் ஐ.பெரியசாமி கூறுவது ஏற்கத்தக்கது அல்ல. திமுக தான் அதிமுகவில் இணையும்.

பாஜக மூன்றாவது பெரிய கட்சி என அண்ணாமலை சொல்வதற்குகாரணம்அது எப்போதும் வளரும் கட்சி தான், அவர்கள் அப்படி தான் சொல்வார்கள். தமிழகத்தில் என்றுமே திமுக, அதிமுக தான் ஆட்சி செய்யும். மாற்று கட்சியினர் யாராலும் ஆள முடியாது என்று கூறினார்.



▶ புதுக்கோட்டை மாவட்டத்தில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நடத்துவதற்கான மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.



▶ விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ராஜபாளையம் ஸ்ரீ ரமணா அகாடமி சீனியர் செகண்டரி பள்ளியில் ஆறாம் வகுப்பு பயிலும் மாணவன் தயாவிஷ்ணுகுமரன் பாஸ்டஸ்ட் டைம் டு சால்வ் 100 மல்டிப்ளிகேஷன் ப்ராப்ளம்-யை 5 நிமிடம் 22 நொடியில் முடித்து உலக சாதனை படைத்து எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்-ல் இடம் பிடித்தமைக்காகவும், பி.ஏ.சி.ஆர் அம்மணி அம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 11-ம் வகுப்பு பயிலும் மாணவி தேஜஸ்யா, தி மோஸ்ட் மெண்டல் அறித்மெடிக் டிவிஷன் 100 பிராப்ளம்ஸ்-யை 5 நிமிடத்தில் முடித்து உலக சாதனை படைத்து எலைட் வேர்ல்ட் ரெக்கார்டில் இடம் பிடித்தமைக்காகவும்,மாவட்ட ஆட்சித் தலைவர் மேகநாத ரெட்டி-யை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.




## அரியலூரில் ஜெயலலிதா பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



அரியலூர் பிப் .24-

அரியலூரில்முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

தமிழக முன்னாள் முதல்வரும், மறைந்த அதிமுக முன்னாள் பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவின், 74வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் மாவட்ட அதிமுகசார்பில், கட்சியின் அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான, தாமரை எஸ். ராஜேந்திரன், அரியலூர் பேருந்து நிலையம் அருகே உள்ள, ஜெயலலிதா மற்றும் எம்ஜிஆர் உருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து, அங்கு குழுமியிருந்த தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சர்க்கரைப்பொங்கல் வழங்கினார். அதைத்தொடர்ந்து, அரியலூர் அருகே லிங்கத்தடிமேடு, வள்ளலார் கல்வி நிலையத்தில் தங்கி கல்வி பயிலும்,நூற்றுக்கணக்கான ஏழை, எளிய மாணவ மாணவிகளுக்கு, வடை பாயாசத்துடன், அதிமுக மாவட்ட செயலாளர் தாமரைஎஸ்.ராஜேந்திரன் அன்னதானம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராமஜெயலிங்கம், அதிமுக நகர செயலாளர்கள் அரியலூர் செந்தில், ஜெயங்கொண்டம் செல்வராஜ், ஒன்றிய செயலாளர் பாலசுப்ரமணியன், செல்வராஜ், தாமரைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரேம்குமார், வழக்கறிஞர்கள் ராம கோவிந்தராஜன், எஸ். வி.சாந்தி, அரியலூர் ஒன்றிய சேர்மன் செந்தமிழ்ச்செல்வி புலவேந்திரன், கயர்லாபாத் ஊராட்சி மன்றத் தலைவர் சவுந்தரராஜன் மற்றும் அதிமுகவின் பல்வேறு அணி நிர்வாகிகள் கட்சி தொண்டர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக கரலை 8மணியளவில், அரியலூர் அரசு சிமெண்ட் ஆலை டைம் ஆபீஸ் முன்பு, அண்ணா தொழிற்சங்கம் சார்பில், ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சிமெண்ட் ஆலை தொழிலாளர்கள் அனைவருக்கும் சர்க்கரைப் பொங்கல், புளியோதரை உள்பட அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அதிமுக மாவட்ட செயலாளர் தாமரை எஸ். ராஜேந்திரன், அரசு சிமெண்ட் ஆலை அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் தங்கவேலு, ராஜேந்திரன், சீனிவாசன், லோடிங் ராஜேந்திரன், கோவிந்தசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அதைத் தொடர்ந்து அரியலூரில் உள்ள, அரசு போக்குவரத்து கழக கிளை அலுவலகம் முன்பு அண்ணா தொழிற்சங்கம் சார்பில் அதிமுக மாவட்ட செயலாளர் தாமரை எஸ். ராஜேந்திரன் கொடியேற்றி இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசுப் போக்குவரத்துக் கழக அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் சாமிநாதன், ராஜேந்திரன், விக்னேஷ், நடராஜன், மாணிக்கம், சிவகுமார், புகழேந்தி, சீமான் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஆலங்குடியில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 74 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா



ஆலங்குடி,, பிப் 25.-

தமிழக முன்னாள் முதலமைச்சரான மறைந்த ஜெயலலிதாவின் 74 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவையொட்டி ஆலங்குடி சந்தைப்பேட்டையில் அதிமுகசார்பில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் அதிமுகவின் மறைந்த முன்னாள் பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான ஜெயலலிதாவின் பிறந்த நாள் விழாவையொட்டி நகர செயலாளர் பழனிவேல் தலைமையில் அவரது படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர். பிறந்தநாள் விழாவில் நகர மாவட்ட பொறுப்பாளர் சித்தரக்கண்ணு, பத்திர எழுத்தர் நாடிமுத்து, எம்ஜிஆர் மன்றம் தர்மராஜ் சேகர் நூறு ஸ்தனிஸ் லாஸ் வார்டு செயலாளர் தங்கராஜ், நகர பொருளாளர் ராமநாதன், நகரதுணைச் செயலாளர் முருகன், மாவட்ட மாணவரணி ரங்கநாதன், ஆகியோர் அம்மா பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டனர்.

மேலும் சந்தைப்பேட்டையில் இருந்து இரு சக்கர வாகனம் அணிவகுப்பு மரியாதையுடன் ஆலங்குடி அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளிகள், வெளி நோயாளிகள் அனைவருக்கும் அம்மா பிறந்த நாளை முன்னிட்டு பால், பிரட், ஆப்பிள், ஆரஞ்சு மற்றும் பழ வகைகள், பிஸ்கட் ஆகியவற்றை கர்ப்பிணி பெண்கள் தாய்மார்கள் மற்றும் முதியோர்கள் ஆகியோருக்கு ஆலங்குடி தலைமை மருத்துவர் பெரியசாமி முன்னிலையில் சுமார் 100 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

# 'பத்திரிகையாளர் நல வாரியம்' அமைத்து அரசாணை வெளியிட்டது தமிழக அரசு

சென்னை , பிப்25-

பத்திரிகையாளர்களுக்கு நலவாரிய உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் 'பத்திரிக்கையாளர் நலவாரியம்' அமைத்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு பிறப்பித்துள்ள அரசாணை: "தமிழக செய்தித்துறை அமைச்சர் 2021-22 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப்பேரவைக்கூட்டத் தொடரில், 6.9.2021 அன்று நடைபெற்ற செய்தி மற்றும் விளம்பரம் தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான அறிவிப்புகளில், " தமிழகத்தில் முதன்முறையாக, உழைக்கும் பத்திரிகையாளர்களை முன்களப் பணியாளர்களாக தமிழக முதல்வர் அறிவித்துப் பெருமை சேர்த்துள்ளார். அதனடிப்படையில் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச்செவ்வனே செயல்படுத்துவதோடு, நலவாரிய உதவித் தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் "பத்திரிகையாளர் நல வாரியம்" அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

செய்தித்துறை அமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச்செவ்வனே செயல்படுத்துவதோடு, நல வாரிய உதவித்தொகைகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் அளித்திடும் வகையில் "பத்திரிகையாளர் நல வாரியம்" ஒன்றை உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டது.

பத்திரிகையாளர் நல வாரியத்துக்கு வரப்பெறும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வு செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு, பத்திரிகையாளர் நல வாரியக் குழு ஒன்றை அமைத்து, அதற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை பின்வருமாறு நியமித்து அரசு ஆணையிடுகிறது.

இந்த நல வாரியத்தின் தலைவராக செய்தித்துறை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை ஆணையர், நில நிர்வாகத்துறை ஆணையர் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்/ துணைச் செயலாளர் உள்ளிட்டோர் அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சிவந்தி ஆதித்யன் பாலசுப்பிரமணியன் (தினத்தந்தி குழுமம்), ஆர்.எம்.ஆர்.ரமேஷ் (தினகரன் நாளிதழ்), பி.கோலப்பன் (துணை ஆசிரியர், தி இந்து), எஸ்.கவாஸ்கர் (செய்தியாளர், தீக்கதிர் நாளிதழ்), எம்.ரமேஷ் (சிறப்பு நிருபர், புதிய தலைமுறை தொலைக்காட்சி), லெட்சுமி சுப்பிரமணியன் (முதன்மை சிறப்பு நிருபர், தி வீக் செய்தி வார இதழ்) ஆகியோர் அலுவல்சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அரசாணையின்படி, பத்திரிகையாளர் ஓய்வூதியப் பரிசீலனைக் குழு கலைக்கப்படுவதுடன், பத்திரிகையாளர் நலவாரிய புதிய நல உதவித் திட்டங்களுக்கு அமைக்கப்படும் மேற்காணும் குழுவே பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் குறித்த மனுக்களையும் பரிசீலிக்கும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும், நீதிப் பேராணை மனு என் 32091/2019-ன் மீதான மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்" என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






திருவள்ளூர் அடுத்த பேரம்பாக்கத்தில் அரசு பள்ளி அருகே உள்ள பஜார் வீதியில் கட்டப்பட்டு உள்ள கடைகள் ஆனது அரசுக்கு சொந்தமான நீர்நிலை புறம்போக்கு நிலத்தில் கட்டப்பட்டுள்ளது அதனுடைய பரப்பு 8 ஹெக்டர் 62 ஏர்ஸ் ஆகும். இதில் முதல் கட்டமாக 5 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள 46 கடைகள் மற்றும் 28 தெருவோரக் கடைகள் ஆகும் இந்த கடைகளை அரசு அனுமதியோடு ஜேசிபி இயந்திர உதவியுடன் அப்புறப்படுத்தினர் மேலும் இந்த கடைகளை அகற்றுவதினால் சுமார் 5 கோடி மதிப்புள்ள நிலமானதுஅரசு மீட்டுக் கொண்டது. இப்பணியின்போது பொதுப்பணித்துறை உதவிப் பொறியாளர் லோகரட்சகன் மற்றும் வட்டாட்சியர் செந்தில்குமார். வருவாய் துணை வட்டாட்சியர் சுந்தர். வருவாய் துறை ஆய்வாளர் சுமதி. கிராம நிர்வாக அலுவலர் குருமூர்த்தி. மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சந்திரதாசன் தலைமையில் 20க்கும் மேற்பட்ட காவல்துறையினர் இப்பணியில் ஈடுப்பட்டனர்



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் அனைத்து கழகங்களில் கழக கொடி ஏற்றப்பட்டது சூணாம்பேடு பகுதியில் புரட்சித்தலைவி ஜெயலலிதா 74 வது பிறந்த நாள் விழா அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அம்மா திருவுருவப்படத்திற்கு சித்தாமூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் டாக்டர் பிரவீன் குமார் மலர்தூவி ஆரத்தி எடுத்து மரியாதை செய்தனர் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறு ஊராட்சிகளில் அன்னதானம் இனிப்புகள் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# எல்லாபுரம் ஒன்றிய அதிமுக சார்பில் வடமதுரையில் ஜெயலலிதாவின் 64-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது

ஊத்துக்கோட்டை, பிப்25-



திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,வடமதுரையில் எல்லாபுரம் ஒன்றிய அதிமுக சார்பில் ஜெயலலிதாவின் 74-வது பிறந்தநாளை முன்னிட்டு வடமதுரை அரசினர் உயர்நிலைப் பள்ளி வளாகம் அருகே உள்ள எம்ஜிஆரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர், அருகில் பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதை தொடர்ந்து இங்கு 500 பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இதன் பின்னர்,எர்ணாகுப்பம் கிராமத்தில் ஒன்றிய பெருந்தலைவர் இல்ல வளாகத்தில் அதிமுகவினர் 2 ஆயிரம் பேருக்கு வேட்டி, சட்டை, நாள்காட்டி மற்றும் 3 ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளுக்கு ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ் தலைமை தாங்கினார். இதில், சிறப்பு அழைப்பாளராக எல்லாபுரம் ஒன்றிய அதிமுக செயலாளர் எம்.மகேந்திரன் கலந்து கொண்டு பயனாளிகளுக்குவேட்டி, சட்டை, நாள்காட்டி, பிரியாணி ஆகியவற்றை வழங்கினார்.

இதில், ஒன்றிய துணைபெருந்தலைவர் வழக்கறிஞர் கே.சுரேஷ்,திருவள்ளூர் வடக்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் ராஜசேகர், திருவள்ளூர் வடக்கு மாவட்டமாணவர் அணி இணைச் செயலாளர் எம்.ராஜா நிர்வாகிகள் பாஸ்டர் தயாளன்,டி. புஷ்பராஜ், சரத்குமார், ராஜீவ்காந்தி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஒன்றிய செயலாளர் பூவண்ணன் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதாவின் 74 வது பிறந்தநாளை முன்னிட்டு அதிமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மாதவரம் வி. மூர்த்தி உத்தரவின் படி திருவள்ளூர் மாவட்டம் புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில். புழல் ஒன்றிய இளைஞரணி செயலாளர் வடகரை ஆர்.நரேஷ் தலைமையில் பட்டாசு வெடித்து ஜெ.ஜெயலலிதா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு. பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் அதிமுக கட்சி நிர்வாகிகள் கவுன்சிலர் நாராயணசாமி, வழக்கறிஞர் பி.இளம்பாரதி , எஸ்.அருண்குமார், எஸ். பிரவீன் குமார்,ஏ.கார்த்திக், விக்கி, எம்.ஞானவேல், திருமலை, பி.முருகன்,டைலர் முருகன்,கே.சாம்சங், ஆனந்தன்,ராஜா மற்றும் பலர் உடனிருந்தனர்

# சீர்காழியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மாவட்ட செயலாளர் பங்கேற்பு

சீர்காழி, பிப். 25-



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ்நிலையம் எதிரில் அதிமுக பொதுச் செயலாளரும்,முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் பாரதி தலைமை தாங்கினார்.

ஒன்றிய செயலாளர்கள் சந்திரசேகரன், ரவிச்சந்திரன், நற்குணன், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சீர்காழி நகர கழக செயலாளர் வினோத் வரவேற்று பேசினார். விழாவில் மாவட்ட செயலாளர் எஸ். பவுன்ராஜ் கலந்துகொண்டு ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதைசெலுத்தினார். தொடர்ந்து 300 ஏழை எளிய பெண்களுக்கு சேலைகள் வழங்கினார்.

தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி செயலாளர் சக்தி, மாவட்ட துணை செயலாளர் செல்லையன்,மு.தகவல் தொழில்நுட்ப மாவட்ட செயலாளர் நாடி. செல்வமுத்துக்குமரன் பொதுக்குழு உறுப்பினர் ஆனந்த நடராஜன், மாவட்ட நிர்வாகி ராஜமாணிக்கம், நகர பேரவை செயலாளர் மணி, நகர்மன்ற உறுப்பினர்கள்ரமாமணி, கிருஷ்ணமூர்த்தி, நாகரத்தினம், வக்கீல் பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டுறவு சங்க தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



திருவாரூர் மாவட்டம், திருக்கண்டீஸ்வரம் ஊராட்சி, அச்சுதம்பேட்டை கிராமத்திலுள்ள நூலகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணியினை மாவட்ட கலெக்டர் காயத்ரி கிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




# கந்தர்வகோட்டை அரசுப் பள்ளி மாணவர்களுக்கு போட்டித் தேர்வுக்கான கையேடுகள் வழங்கல்

கந்தர்வகோட்டை, பிப்25-



சென்னை உயர்நீதிமன்ற கிளை வழக்கறிஞர் கணபதி சுப்பிரமணியம், உதவி வழக்கறிஞர் ஜெயக்காந்தி பரிந்துரையின் படி புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆறு பள்ளிகளுக்கு முதன்மைக் கல்வி அலுவலர் சாமி சத்தியமூர்த்தி முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக கந்தர்வகோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக போட்டித் தேர்வுக்கு தயாராகும்மாணவிகளுக்கு உதவும் வகையில் கந்தர்வகோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் ஆ.மணிகண்டன்மூலமாக தலைமையாசிரியர் ஷப்னம் அவர்களிடம் நீட், ஜே இ இ , ஐஐடி , சட்டம், ஊக்கத்தொகை போட்டித்தேர்வுகள் உள்ளிட்டவற்கு தயாரிப்பிலுள்ள மாணவிகளுக்கு பயனளிக்கும் வகையில் 7 ஆயிரம் மதிப்புள்ள புத்தகங்கள் சிறப்பு கையேடுகள் வழங்கப்பட்டது.

உடன் பள்ளி ஆசிரியர்கள், செல்வராஜ், சசிக்குமார், மணிவண்ணன், ஜெயக்குமார்,மணியரசன், ஸ்ரீ குமாரிசந்தியா மற்றும் போட்டித்தேர்வுக்கு தயாராகும் மாணவிகள் உள்ளனர்.

# ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் உலகத் தாய்மொழி திருநாள் கொண்டாட்டம்

சென்னை , பிப்25-



ஸ்ரீகன்யகாபரமேஸ்வரி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் உலகத் தாய்மொழி திருநாளைக் கொண்டாடும் விதமாக மாணவிகளின் மொழித் திறமையை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கல்லூரி வளாகத்தில் போட்டிகள் நடைபெற்றன.தமிழ், தெலுங்கு, இந்தி, சமஸ்கிருதமொழி பயிலும் மாணவிகள்போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

இதில் தமிழ்த்துறையின் சார்பில் மாணவிகளுக்கு பேச்சு போட்டிகள் நடைபெற்றது. நடுவராக பி.செல்வ சங்கரி உதவிப்பேராசிரியர் கணிதவியல் துறை, பொறுப்பேற்றும், ஓவியப்போட்டியின் நடுவர்களாக கே.ஆயிஷா பானு, உதவிப் பேராசிரியர்,மனையியல் மற்றும் உள்துறை வடிவமைப்பு துறை, கே.எம். சரோஜ், உதவிப் பேராசிரியர் மற்றும் மனையியல் மற்றும் உள்துறை வடிவமைப்பு துறை ஆகியோர் பணியாற்றினர்.

இந்தி,தெலுங்கு மற்றும் சமஸ்கிருத மொழி பேசும் மாணவிகளுக்காக,கணினி வழிக் காட்சியமைப்பு போட்டி நடைபெற்றது. பி.காம் ஹானர்ஸ் துறையின் தலைவர் பி.பரணி குமாரி நடுவராக இருந்து பரிசுக்குரிய மாணவிகளை தேர்வு செய்தார்.

கலாலயா கலைக் குழுவின் சார்பாக பாடல் போட்டி நடைபெற்றது. பி.காம்ஹானர்ஸ்துறையின் உதவிப் பேராசிரியை வி.அமிதா நடுவராக இருந்து மாணவிகளை உற்சாகப்படுத்தினார்.

இந்நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் முனைவர் டி. மோகனஸ்ரீ வழிகாட்டுதலின்படி , மொழித்துறை மற்றும் கலாலயா கலைக்குழு, நட்சத்திரா மாணவியர் பேரவை முன்னின்று சிறப்பாக செயல்படுத்தினர்.

# திருவள்ளூர் மாவட்டம் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் வாகன ஓட்டிகளுக்கு செயல்முறை விளக்கம்

திருவள்ளூர் , பிப்25-



திருவள்ளூர் மாவட்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் பன்னீர்செல்வம் ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொள்ள வந்த வாகன ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வு முகாமை நடத்தினார்

காரில் உள்ள சீட் பெல்ட் ஏன் அணிய வேண்டும் ? எப்படி அணியவேண்டும் ? அதனுடைய பயன்கள் மற்றும் ஏற்படும் சிக்கல்களை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்றும் கார்களில் உள்ள ஹேர் பேக் எப்படி நம்மை பாதுகாக்கிறது மற்றும் ஹெட் ரெஸ்ட் காரில் ஓட்டுனர்கள் வாகனத்தை இயக்கும் முன்பு அதனை எப்படி சரி செய்து கொள்ள வேண்டும் என்றும் விபத்து காலங்களில் கார் உள்ளே சிக்கிக் கொள்ளும் நாம் எப்படி ஹெட் ரெஸ்ட் மூலம் காரின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு வெளியே வருவது

இருசக்கர வாகனங்களை பயன்படுத்தும்போது நாம் ஏன் தலைகவசம் அணிய வேண்டும் தலைக்கவசம் அணிவதனால் நமக்கு என்னென்ன நன்மைகள் உள்ளது என்பதையும்

சாலையில் குறியீட்டு இருக்கும் சாலை குறியீட்டின் விளக்கம் என்ன அதன்படி நாம் செயல்பட்டால் முற்றிலுமாக விபத்தில் இருந்து பாதுகாக்க முடியும் என்பதனை சுமார் 100 பேர் கொண்ட ஓட்டுனர்களுக்கு செயல்முறை விளக்கம் அளித்தார்ஓட்டுனர்களில் சிவகுமார் மற்றும் மகேஷ் கல்லூரி மாணவன் இந்த விழிப்புணர்வு தங்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருந்தது என்று ஆய்வாளர் பன்னீர் செல்வம் அவர்களுக்கு வாழ்த்துக்களை கூறி இனி சாலைவிதிகளை மதிப்போம் கூறி வாகன ஓட்டிகள் மகிழ்ந்தனர்.

# 62 சிறப்பு தொகுப்புகளை தரங்கம்பாடி ராஜீவ்புரத்தில் உள்ள மனித நேய அரவணைப்பு இல்லத்திற்கு வழங்கல்

தரங்கம்பாடி, பிப்-25;




மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்காவில் கடந்த பொங்கல் தினத்திற்கு தமிழக முதல்வர் உத்தரவின்பேரில் 21 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை தொகுப்பு வைத்து வழங்கப்பட்டது.

இதில் தரங்கம்பாடி தாலுக்காவில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுக் கொள்ளாத நிலுவையில் உள்ள 532 பொங்கல் சிறப்பு தொகுப்புகளில்,62 சிறப்பு மளிகை தொகுப்புகளை தரங்கம்பாடி, பொறையார், ராஜீவ்புரத்தில் உள்ள மனிதநேய அரவணைப்பு இல்லத்திற்கு வழங்கிட மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா ஆணையிட்டார்.

மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் மேற்படி இல்லத்தில் 62 சிறப்பு மளிகை தொகுப்பு பைகளை அதன் நிறுவனத் தலைவர் அருள்தாஸிடம் தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலர் பாபு வழங்கினார். நிகழ்வின் போது வட்ட வழங்கல் அலுவலக தனி வருவாய் ஆய்வாளர் மரிய ஜோசப் ராஜ், வட்ட பொறியாளர் ஐயப்பன், அங்காடி விற்பனையாளர்கள் எட்வர்ட், மாணிக்கம் மற்றும் கிருத்திகா ஆகியோர் உடனிருந்தனர்.

# மணமேல்குடி வட்டார வள மையத்தில் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற்றது

**புதுக்கோட்டை , பிப்.25-**

புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சாமி சத்தியமூர்த்தி வழிகாட்டுதலின் படி மணமேல்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட 6 குறுவள மையங்களில் இல்லம் தேடி கல்வி தன்னார்வலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி மற்றும் கண்காட்சி நடைபெற்றது.

இப்பயிற்சியானது மணமேல்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜீவானந்தம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதேபோல் கோட்டைப்பட்டினம் அரசு மேல்நிலைப்பள்ளி, அம்பலவாணாநேந்தல் அரசு மேல்நிலைப்பள்ளி. கட்டுமாவடி அரசு மேல்நிலைப்பள்ளி, பெருமருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய அனைத்து குறுவள மையங்களிலும் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது.

இப்பயிற்சியானது இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி பாட வாரியாகவும் மற்றும் இல்லம் தேடி கல்வி மையத்தில் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெறுவதற்கு கற்றல் கற்பித்தல் உபகரணம் பொருட்களை கண்காட்சியாக அனைத்து குறுவள மையங்களில் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு குறுவள மையங்களிலும் சிறப்பான கண்காட்சி படைப்புகளை தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசும் கேடயமும் வழங்கப்படும்.

இப்பயிற்சியில் கருத்தாளர்களாக ஆசிரியர் பயிற்றுநர்கள் முத்துராமன் வேல்சாமி அங்கயற்கண்ணி ஆசிரியர்கள் இளமாறன் அய்யனார் கருப்பையா முகமது முகைதீன் முகமது பாரூக் செபஸ்தியான் கண்ணன் ஆசிரியர் பயிற்சி அளித்தனர். இதில் தொடக்க நிலை மற்றும் உயர் தொடக்கநிலை தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு திருமதி சிவயோகம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முத்துக்குமார் மற்றும் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஆசிரியர்கள் திரு பழனி ஆண்டவர் , கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

# ஆலங்குடி அருகே மங்களாபுரத்தில் நாளை மாபெரும் ஜல்லிக்கட்டு




ஆலங்குடி. பிப்.25-

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே உள்ள மங்களாபுரத்தில் முனீஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் மாசி திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் மாசிமகத்தன்று ஜல்லிக்கட்டு நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடைபெறும் இடத்தில் அம்புலி ஆற்று நீர் பிடிப்பு இருப்பதால் மாசி மகத்தன்று ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை. இதையடுத்து ஜல்லிக்கட்டு நாளை 26.02.2022 (சனிக்கிழமை) நடைபெறுகிறது. இதையொட்டி முனீஸ்வரர் கோவில் முன்பாக உள்ள நஞ்சைநிலத்தில் வாடிவாசல் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தடுப்புகள் அமைத்து முன்னேற்பாடு பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. முன்னேற்பாடு பணிகளை வருவாய்த்துறை சார்ந்த வருவாய்க் கோட்டாட்சியர் அபிநயா மற்றும் ஆலங்குடி தாசில்தார் செந்தில்நாயகி, ஆலங்குடி டிஎஸ்பி வடிவேல் மற்றும் காவல் ஆய்வாளர் அழகம்மை, சப்இன்ஸ்பெக்டர் குணசேகரன், ஆகியோர் ஜல்லிக்கட்டு நடைபெறும் வாடிவாசலை ஆய்வுசெய்து பார்வையிட்டனர். மேலும் மங்களாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விழாக்குழுவினர் கார்த்திக், செல்வம், வடிவேல், மற்றும் இளைஞர்கள் விழாவை ஒருங்கிணைத்து ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். மேலும் மாவட்ட அளவில் போலீசார், அரசு அதிகாரிகள் பார்வையிட்டனர்.






# கோவில்பட்டி அருகே பட்டாசு ஆலையில் வெடிவிபத்து 4 தொழிலாளர்கள் பரிதாபமாக பலி





கோவில்பட்டி ,பிப்.25-

கோவில்பட்டி அருகே துறையூரில் உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 4 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி ராஜீவ் நகரை சேர்ந்தவர் பிரபாகரன். இவர் கோவில்பட்டி அருகே உள்ள துறையூரில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் 45 கட்டடங்கள் உள்ளன. நேற்று இதில் ஒரு கட்டிடத்தில், பொட்டாசியம் நைட்ரேட், அலுமினியம் பவுடர், சல்பர் ஆகிய 3 ரசாயனங்களை கொண்டு, பேன்சி ரக பட்டாசுகள் தயாரிப்பதற்காக குழாயில் மருந்து செலுத்தும் பணி நடந்தது. அப்போது திடீரென அங்கு வெடிவிபத்து ஏற்பட்டது.

இதில், அந்த கட்டிடம் இடிந்து விழுந்து தரைமட்டமாகியது. இதில் சிக்கிய தொழிலாளர்கள் கோவில்பட்டி அருகே ஈராச்சியை சேர்ந்த ராமர்(65), பசுவந்தனை அருகே தொட்டம்பட்டியை சேர்ந்த ஜெயராஜ் (47), குமாரபுரத்தை சேர்ந்த தங்கவேல் (43), கோவில்பட்டி அருகே நாலாட்டின்புதூரைச் சேர்ந்த கண்ணன் என்ற மாரிமுத்து (48) ஆகிய 4 பேரும் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ், கடம்பூர் செ.ராஜு எம்.எல்.ஏ., காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், டி.எஸ்.பி.உதயசூரியன், கோட்டாட்சியர் சங்கரநாராயணன், வட்டாட்சியர் அமுதா, மாவட்ட தீயணைப்பு நிலைய அலுவலர் குமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.






# ஆவுடையார்கோவிலில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா அனுசரிப்பு



**ஆவுடையார் கோவில் பிப்.25-**

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலில் மறைந்த முன்னாள் முதல்வரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் முன்னாள் பொதுச்செயலாளருமான ஜெயலலிதாவின் 74-வது பிறந்த நாள் விழா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களால் தமிழ்நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக ஆவுடையார்கோவில் கடைவீதியில் ஜெயலலிதாவின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது, .இந்த நிகழ்ச்சி கட்சியின் ஒன்றிய செயலாளர் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்த நிகழ்ச்சியில் அதிமுக ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தினுடைய தலைவர்களும் சுமார் 50க்கும் மேற்பட்ட தொண்டர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட அதிமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.






# கணவரை இழந்த பெண்ணின் வாடகை கடையை அபகரிக்க முயன்ற இருவர் கைது

ஓமலூர் , பிப்.25-

ஓமலூர் அருகே வாடகைக்கு விட்ட கடையை அபகரிக்க முயன்ற இரண்டு பேரை கைது செய்த போலீசார், மேலும், இருவரை தேடி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகேயுள்ள கோட்டமேட்டுப்பட்டி கிராமம் அண்ணாநகரைச் சேர்ந்தவர் அமுதா. இவரது கணவர் இறந்து விட்ட நிலையில், அவரும், அவரது மாமியாரும் அண்ணாநகரில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில், அங்கு அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கடை கட்டி வாடகைக்குவிட்டுள்ளனர். இந்த கடையை ஓமலூர் அருகேயுள்ள தாராபுரத்தைச் சேர்ந்த அசோக் என்பவர் வாடகைக்கு எடுத்து பட்டறை நடத்திவந்துள்ளார். இந்நிலையில், நாங்களே கடை நடத்தப் போகிறோம் அதனால், விரைவாக கடையை காலி செய்து கொடுக்குமாறு அமுதா கூறியுள்ளார். ஆனால், கடையை காலி செய்யாமல் தகறாரு செய்ததுடன், அந்த நிலத்தை அபகரிப்பதற்காக ஓமலூர் அருகேயுள்ள அசோக்குடன் சேர்ந்து ஆர்.சி.செட்டிப்பட்டி ஆதிதிராவிடர் காலனியில் வசித்து வரும் தேசிய மக்கள் கழகம் நிறுவனர் சங்கரின் தூண்டுதலின் பேரில், அவரது கட்சியின் மாநில செயலாளர் அர்ஜுனன், மாநில தொண்டரணி செயலாளர் மாயக்கண்ணன் ஆகியோர் தொடர்ந்து தொல்லை செய்ததுடன், கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதையடுத்து அமுதா, ஓமலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இந்த புகாரின் பேரில் நான்குபேர் மீதும் வழக்குப்பதிவு செய்த ஓமலூர் போலீசார் விசாரணை நடத்தினர். இதையடுத்து தாராபுரத்தைச் சேர்ந்த அசோக், ஆர்.சி.செட்டிபட்டியைச் சேர்ந்த மாயக்கண்ணன் ஆகிய இருவரையும் கைது செய்து சிறையிலடைத்த போலீசார், கட்சியின் நிறுவனர் சங்கர் மற்றும் மாநில செயலாளர் அர்ஜுனன் ஆகியோரை தேடி வருகின்றனர்.

# புதுக்கோட்டையில் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முள்வேலி பேரிக்கார்டரை அகற்றிட புதுகை வரலாறு கோரிக்கை




**புதுக்கோட்டை , பிப்.25-**

புதுக்கோட்டை நகரில் பேருந்து நிலையம் உள்பட பல்வேறு இடங்களில் தேர்தலுக்காக அமைக்கப்பட்ட முள்வேலி பேரிகார்டரை உடனடியாக அகற்ற வேண்டுமென மாவட்ட நிர்வாகத்திற்கு புதுகை வரலாறு கோரிக்கை விடுத்துள்ளது.

பிப்ரவரி 19ஆம் தேதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று முடிந்தது. அதன் வாக்குகள் பிப்ரவரி 22ஆம் தேதி என்னபட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன. மாநில தேர்தல் ஆணையம் 23ஆம் தேதி புதன்கிழமை தேர்தல் நடைமுறைகளை வாபஸ் பெற்றுக் கொண்டுவிட்டது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவான வாக்குகள் அறந்தாங்கி மற்றும் புதுக்கோட்டையில் எண்ணப்பட்டன புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் எண்ணிக்கை நடைபெற்றது.

பார்வையாளர்கள் வேட்பாளரின் ஆதரவாளர்கள் வளாகத்திற்குள் செல்லாதவாறு மாவட்ட காவல்துறை சார்பில் பேருந்து நிலையம், ஜல்லிக்கட்டு காளை அமைந்துள்ள இடம் உள்ளிட்ட இடங்களில் முள்வேலி பேரிகார்டு தடுப்பு அமைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு 3 நாட்கள் ஆன நிலையிலும் இதுவரை தடுப்புகள் அகற்றப்படாமல் இருக்கின்றது. பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் ஆயிரக்கணக்கானோர் இந்த வழிச்சாலையில் வழியாகத்தான் சென்று வருகின்றனர்.

ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றன அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறுவதற்கு முன்பாக மாவட்ட காவல்துறை முள்வேலி தடுப்பு பேரிகார்டரை அகற்ற வேண்டுமென புதுகை வரலாறு வலியுறுத்துகிறது.

# நேட்டோ படைகள், அமெரிக்கா தலையீடு; ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கியது எப்படி?

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்துள்ள நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் தற்போது வரை இந்த விவகாரம் தொடர்பாக நிகழ்ந்த சம்பவங்கள்.

**நவம்பர் 10, 2021**

செயற்கைக்கோள் புகைப்படங்களின் மூலம் உக்ரைன் எல்லையில் ரஷ்யா படைகளை குவித்து வருவது கண்டறியப்பட்டது.

**நவம்பர் 28, 2021**

எல்லையில் ஒரு லட்சம் படை வீரர்கள், ராணுவ டாங்குகளை ரஷ்யா குவித்திருப்பதாக உக்ரைன் தெரிவித்தது.

**டிசம்பர் 7, 2021**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் எச்சரித்தார்.

**டிசம்பர் 17, 2021**

கிழக்கு ஐரோப்பா மற்றும் உக்ரைனில் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் நேட்டோ கூட்டமைப்பு நிறுத்த வேண்டும் என்றும், உக்ரைனையோ அல்லது மற்ற முன்னாள் சோவியத் நாடுகளையோ நேட்டோ கூட்டமைப்பில் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ரஷ்யா கோரிக்கை விடுத்தது.

**ஜனவரி 3, 2022**

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால் அமெரிக்கா தக்க பதிலடி கொடுக்கும் என உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஸெலென்ஸ்கிக்கு அமெரிக்க திபர் பைடன் உறுதியளித்தார்.

**ஜனவரி 10, 2022**

ஜெனிவாவில் அமெரிக்க மற்றும் ரஷ்ய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் நேட்டோ தொடர்பான கோரிக்கைகளை அமெரிக்கா நிராகரித்தது.

**ஜனவரி 17, 2022**

பெலாரஸில் ரஷ்ய ராணுவம் போர் ஒத்திகையை தொடங்கியது. வெளிப்புற ஆக்கிரமிப்பை முறியடிப்பதை இலக்காகக் கொண்டு பயிற்சி நடைபெறுவதாக ரஷ்யா தெரிவித்தது.

**ஜனவரி 24, 2022**

படைகளை தயார் நிலையில் வைத்த நேட்டோ, கிழக்கு ஐரோப்பாவில் கூடுதல் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களுடன் தனது ராணுவ பலத்தை வலுப்படுத்தியது. அமெரிக்கா 8,500 வீரர்களை தயார் நிலையில் இருக்க உத்தரவிட்டது.

**ஜனவரி 25, 2002**

6000 வீரர்கள், 60 விமானங்களுடன் கிரிமியாவில் போர் பயிற்சியை நடத்தியது ரஷ்யா'

**ஜனவரி 27, 2022**

பிப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என அமெரிக்க அதிபர் பைடன் எச்சரித்தார். அதே நேரம் ரஷ்யாவின் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சீனா அமெரிக்காவிடம் வலியுறுத்தியது.

**ஜனவரி 28, 2022**

ரஷ்யாவின் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் கண்டுகொள்ளப்படவில்லை என்றும், ஆனால் தொடர்ந்து பேச தயாராக இருப்பதாகவும் ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்தார். போர் தொடர்பான மேற்கத்திய நாடுகளின் கருத்துகள் தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்பதால் பீதி கிளப்ப வேண்டாம் என உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்தார்.

**பிப்ரவரி 1, 2022**

ரஷ்யா படையெடுக்கும் என்ற அமெரிக்காவின் கூற்றை மறுத்தார் புதின்

**பிப்ரவரி 2, 2022**

கிழக்கு ஐரோப்பிய பகுதியில் நேட்டோ படைகளை வலுப்படுத்த 3000 வீரர்களை அமெரிக்கா அனுப்பியது.

**பிப்ரவரி 6, 2022**

ஒரு போரை நிகழ்த்துவதற்கான 70 சதவீத கட்டமைப்புகளை ரஷ்யா நிறுவியுள்ளதாக அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியானது.

**பிப்ரவரி 8, 2022**

மாஸ்கோவில் புதினை சந்தித்த பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன், உக்ரைன் நெருக்கடியை ரஷ்யா அதிகரிக்காது என்று தெரிவித்தார்.

**பிப்ரவரி 10, 2022**

ரஷ்யா, பெலாரஸ் இணைந்து 10 நாள் போர் பயிற்சியை தொடங்கின. அதே சமயம் இங்கிலாந்து வெளியுறவுச் செயலர் லிஸ் டிரஸ் மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

**பிப்ரவரி 12, 2022**

பைடனும் புதினும் காணொலி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தினர். இருவரும் பரஸ்பரம் குற்றம் சாட்டியதால் பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை

**பிப்ரவரி 15, 2022**

உக்ரைன் எல்லையில் இருந்து படைகளை திரும்பப் பெறுவதாக ரஷ்யா அறிவித்தது. ஆனால் அது உண்மையல்ல என்று அமெரிக்கா மறுத்தது.

**பிப்ரவரி 17, 2022**

ரஷ்ய ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு உக்ரைன் பகுதிகளான டோனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளில் கிளர்ச்சியாளர்களுக்கும், உக்ரைன் ராணுவத்துக்கும் மோதல் தொடங்கியது.

**பிப்ரவரி 18, 2022**

தங்கள் பகுதியிலுள்ள மக்களை பாதுகாப்பாக ரஷ்யாவுக்கு வெளியேற்றுவதாக கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

**பிப்ரவரி 19, 2022**

கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் தங்களது வீரர்கள் இருவர் உயிரிழந்ததாக உக்ரைன் அறிவித்தது.

**பிப்ரவரி 21, 2022**

பைடனும், புதினும் சந்தித்துப் பேச சம்மதித்திருப்பதாக ஃபிரான்ஸ் தெரிவித்தது. உக்ரைனிலிருந்து இந்தியர்கள் வெளியேற இந்திய தூதரகம் அறிவுறுத்தியது.

**பிப்ரவரி 22, 2022**

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள டோனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் பகுதிகளை சுதந்திர நாடாக ரஷ்யா அங்கீகரித்தது.

**பிரவரி 23, 2022**

ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கத் தொடங்கியது.

**பிப்ரவரி 24, 2022**

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# சென்னையில் பகுதிநேர ஆசிரியர்கள் போராட்டம்



சென்னை , பிப்.25-

தமிழகத்தில் கடந்த 2021-ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் உடற்கல்வி, ஓவியம், தையல் பயிற்சி, கணிப்பொறியியல், இசை, தோட்டக்கலை உள்ளிட்ட ஆசிரியர் பணிகளுக்கு 16 ஆயிரத்து 549 பகுதிநேர ஆசிரியர்கள் பணி அமர்த்தப்பட்டனர், மாதசம்பளம் 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது, இதனையடுத்து 7 ஆயிரம் ரூபாயாக வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தங்களை பணி நிரந்தரம் செய்யக்கோரி பல்வேறு கட்டங்களில் போராட்டங்கள் நடத்தி வந்தனர், இதனையடுத்து 7 ஆயிரத்து 700 ரூபாய் ஊதியம் வழங்கி பிறகு தற்போது 10 ஆயிரம் ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போதுசுமார் 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சி அமைந்தால் பகுதி நேர ஆசிரியர்கள் கோரிக்கையை பரிசீலனை செய்யோம் என வாக்குறுதி அளித்தனர், இதுவரை எந்தவித நடவடிக்கையும் இல்லை, எனவே இன்று 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் பகுதிநேர ஆசிரியர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்யக்கோரி, பள்ளி கல்வித்துறை தலைமை அலுவலகமான சென்னை டிபிஐ வளாகத்தில் 5 ஆயிரத்திற்கும்மேற்பட்ட பகுதிநேர இருபால் ஆசிரியர்கள் காத்திருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# செய்யாறு வடக்கு ஒன்றிய அதிமுக சார்பில் ஜெயலலிதா 74ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா



தி.மலை , பிப்.25-

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம் செய்யாறு வடக்கு ஒன்றியம் அதிமுக சார்பில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா 74ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா முன்னிட்டு வடக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன் தலைமையில் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலை மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இணைச்செயலாளர் விமலா மகேந்திரன் கலந்து கொண்டுசெய்யாறுவடக்கு ஒன்றியம் அலுவலகத்தில் வைக்கப்பட்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலை மற்றும் அன்னதானம் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள் நகர அம்மா பேரவை செயலாளர் வெங்கடேசன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பூக்கடை கோபால் , செபாஸ்டின் துறை, பழனி, பிரகாஷ், சுதாகர், மகாதேவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற வேட்பாளர்கள்



▶ 1,லீலாவதி சாந்தகுமார்., 2,ஸ்ரீதேவி தேவராஜ்., 3,இளங்கோவன்., 4,கார்த்திக் கோட்டீஸ்வரன்

சென்னை , பிப்.25-

நடைபெற்று முடிந்த நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் சென்னையை அடுத்த செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 4வது வார்டில் திமுக வேட்பாளர் கார்த்திக் கோட்டீஸ்வரன் 547 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் இதைப்போல நாரவாரி குப்பம் பேரூராட்சி 17-வது வார்டில்திமுகவேட்பாளர் இளங்கோவன் 309 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

நாரவாரிகுப்பம் பேரூராட்சி 12 வது வார்டில் சுயேட்சை வேட்பாளர் ஸ்ரீதேவி தேவராஜ் 331 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். நாரவாரிகுப்பம் பேரூராட்சி 6-வது வார்டில் காங்கிரஸ் வேட்பாளர் லீலாவதி சாந்தகுமார் 574 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.இவர்களுக்கு அக் கட்சியினர் மாலை ,சால்வை அணிவித்து வாழ்த்துகள் தெரிவித்தனர்.

# திருமருகல் ஒன்றியத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்



**நாகப்பட்டினம், பிப்.25–**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியத்தில் ஒன்றிய அதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 74-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. முன்னதாக திருமருகல் சந்தைப்பேட்டையில் அமைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் பஸ் நிலையம் அருகில் அமைக்கப்பட்டிருந்த அவரதுபடத்திற்குமாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.தொடர்ந்து மெயின்ரோட்டில் அமைந்துள்ள எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆசைமணி தலைமை வகித்தார்.

திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் இராதாகிருட்டிணன், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம். பக்கிரிசாமி, ஒன்றிய குழு துணை தலைவர் திருமேனி, ஒன்றிய குழு உறுப்பினர் பெரியமணி, ஊராட்சி மன்ற தலைவர்கள் கண்ணன், உமாமகேஸ்வரி ரமேஷ்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு பொருளாளர் நடராஜன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திட்டச்சேரியில்பேரூர் கழகசெயலாளர் அப்துல் பாசித் தலைமையில் அதிமுகவினர் ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். அதேபோல்ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

# தரங்கம்பாடி பேரூராட்சியில் வெற்றி பெற்ற 15 வார்டு திமுக உறுப்பினர்கள் வீடு விடாக சென்று நன்றி தெரிவித்தனர்







தரங்கம்பாடி, பிப்- 25;

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி பேரூராட்சியில் 15 வார்டுகளில் கடந்த 19-ம் தேதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் 15 வார்டுகளிலும் திமுக வெற்றி பெற்றது.

அதன்தொடர்ச்சியாக வேட்பாளர்கள் அறிமுக கூட்டத்தில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் 15-வார்டு உறுப்பினர்களும் நன்றி செலுத்த வேண்டும் என்று கூறியிருந்தார். அதன் பெயரில் வார்டு உறுப்பினர்கள்திமுகவார்டு பொறுப்பாளர்களுடன் வீடுவீடாகசென்றுவாக்கு செலுத்தியவர்களுக்கு இனிப்புகள் மற்றும் நோட்டீஸ் வழங்கி நன்றி தெரிவித்தனர்.

நிகழ்ச்சிகளில் ஒன்றிய செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், நகர செயலாளர் வெற்றிவேல், நகர அவைத்தலைவர்கந்தசாமி, திமுக பிரமுகர்கள் எம். ஆர்.கே.முத்துக்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் ஈச்சங்குடி இளங்கோவன் ,ஊராட்சி மன்றதலைவர்கள் ராஜா, பைலட் மற்றும் கழகமூத்த முன்னோடிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள்

# தூத்துக்குடி எஸ்.பி.யாக இருந்த ஜெயக்குமார் சிபிசிஐடி சிறப்பு புலனாய்வு பிரிவு எஸ்.பி.யாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்

தூத்துக்குடி

தமிழக அமைச்சர் கே.என். நேருவின் சகோதரர் ராமஜெயம் கடந்த 2012-ம் வருடம் மார்ச் 29-ம் தேதி திருச்சியில் நடைப்பயிற்சி சென்றபோதுபடுகொலை செய்யப்பட்டார்.

தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தகொலைதொடர்பாக சிபிசிஐடி போலீசார், சிபிஐ விசாரணை நடத்தி வந்தனர்.

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஜெயக்குமார் தலைமையில், அரியலூர் டி.எஸ்.பி. மதன், சென்னை சிபிஐ-யை சேர்ந்த ரவி ஆகியோர் அடங்கிய குழு விசாரிக்க வேண்டும்; அடுத்தகட்ட விசாரணையைச் சிறப்புக் குழு புலனாய்வு தொடர வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், தூத்துக்குடி எஸ்.பி.யாக இருந்த ஜெயக்குமார் சிபிசிஐடி சிறப்பு புலனாய்வு பிரிவு எஸ். பி.யாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி.யாக பாலாஜி சரவணனை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சென்னை குற்றப்பிரிவு ஐஜி காமினி தாம்பரம் காவல் ஆணையரக கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அமலாக்கத்துறை ஐஜி விஜயகுமாரி ஆவடி காவல் ஆணையரக கூடுதல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# விவாகரத்து நோட்டீசில் கையெழுத்து போடாததால் மனைவி மற்றும் மகளை கத்தியால் குத்திய தலைமை காவலர் காவல் நிலையத்தில் சரண்



திருவள்ளூர் , பிப்.25-

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் பஜார் பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள (SCP) எனப்படும் சென்னை செக்யூரிட்டி போலீஸ் சில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறார் இந்நிலையில் இவருக்கு 2005ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று 3 மகள்கள் உள்ள நிலையில் இவருக்கும் இவரது மனைவி பூர்ணிமா விற்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் ராஜேந்திரன் தனது மனைவியிடம் இருந்து விவாகரத்து கேட்டு சண்டையிட்டு வந்துள்ளார் இன்று காலை மனைவியிடம் விவாகரத்து நோட்டீஸ் கொடுத்து கையெழுத்து இடுமாறு கூறியதில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து சண்டை போட்டு சென்றுவிட்ட ராஜேந்திரன் மீண்டும் மதியம் வீட்டிற்கு வந்து தகராறில் ஈடுபட்டுள்ளார் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு முற்றியதில் ஆத்திரம் அடைந்த ராஜேந்திரன் வீட்டில் இருந்த கத்தியை எடுத்து மனைவியின் இடது கை மற்றும் வயிற்றில் குத்தியுள்ளார் தடுக்க வந்த 10 வகுப்பு படிக்கும் மகள் பத்மினியும் குத்தியதில் இருவரும் ரத்த வெள்ளத்தில் உறைந்த நிலையில் ராஜேந்திரன் தப்பியோடியடியுள்ளார் இதற்கிடையில் பத்மினி மற்றும் பூர்ணிமாவின் அலறல் சத்தம் கேட்டு கீழிருந்த அக்கம்பக்கத்தினர்.

மேலே சென்று பார்த்தபோது ரத்தவெள்ளத்தில் உறைந்து கிடப்பது தெரியவந்தது இதனையடுத்து காவல்துறைக்கு தகவல் தெரிவித்து இருவரையும் மீட்டு அருகே உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த மீஞ்சூர் காவல் துறையினர் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்து நிலையில் தப்பி ஓடிய கணவர் ராஜேந்திரன் மீஞ்சூர் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளார் விவாகரத்து நோட்டீஸில் கையெழுத்து போடாததால் மனைவி மற்றும் மகளை கத்தியால் குத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சியில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள்



சீர்காழி, பிப்.25–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சி உள்ளது. இந்த நகராட்சி 24 வார்டுகளை கொண்டது. இந்நிலையில் கடந்த 19ஆம்தேதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. இதில் 24வது வார்டுக்கும்போட்டியிடும் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் .அதனைத் தொடர்ந்து வாக்கு பதிவான எந்திர பெட்டிகள் சீர்காழி ஊழியக்காரன் தோப்பில் உள்ளசபாநாயகமுதலியார் இந்து மேல்நிலைப் பள்ளியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு நேற்று வாக்கு எண்ணும் பணி தொடங்கியது.

இதில் திமுக 11 வார்டுகளையும், அதிமுக 3 வார்டுகளையும், பாட்டாளி மக்கள் கட்சி 2 வார்டுகளையும், தேசிய முற்போக்கு திராவிட கழகம் 1வார்டு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் 1வார்டு, சுயேச்சைகள் 6 வார்டுகளைகைப்பற்றியது. மொத்தத்தில் சீர்காழி நகராட்சியை 11 இடங்களில் வெற்றிபெற்ற திமுக கைப்பற்றியது.

வெற்றிபெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:-

1-வார்டு (அதிமுக வெற்றி) கிருஷ்ணமூர்த்தி (அதிமுக)பெற்றவாக்குகள் 161 டேவிட் (திமுக) 149 வாக்குகள் ரமேஷ் (சுயேட்சை) 123 வாக்குகள், பாண்டியன் (தேசிய முற்போக்கு திராவிட கழகம்) 79 வாக்குகள் உள்ளிட்ட 7 பேர்கள் போட்டியிட்டன. 2. வார்டு (சுயேச்சை)வெற்றி ரஹ்மத் நிஷா (சுயேச்சை) பெற்ற வாக்குகள் 508. சிராஜுன்னிஸா (இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்) 267 ஜரினா பேகம் (அதிமுக) 28 சுயேச்சைகள் உள்ளிட்ட 6பேர் போட்டியிட்டனர்.

வார்டு 3 (திமுக வெற்றி) கஸ்தூரிபாய்(திமுக)பெற்ற வாக்குகள் 383, காயத்ரி (அதிமுக) 284 சுகந்தி (சுயேச்சை) 80 வார்டு-4 (அதிமுகவெற்றி)ரமாமணி (அதிமுக)பெற்றவாக்குகள் 288, விஜயரெங்கன் (விடுதலை சிறுத்தைகள் கட்சி) 214. கண்ணையன்(சுயேச்சை) 170. முருகபாரதி (சுயேச்சை) 160 உள்ளிட்ட 8பேர் போட்டியிட்டனர்.

வார்டு 5 (சுயேச்சை ) வெற்றி கலைச்செல்வி (சுயேச்சை) பெற்ற வாக்குகள் 347 குணவதி (திமுக) 289. அஞ்சலிதேவி (அதிமுக) 254. பூங்குழலி (சுயேச்சை) 103 . உள்ளிட்ட 7பேர் போட்டியிட்டனர். வார்டு 6 (சுயேச்சை)வெற்றி பாலமுருகன் (சுயேச்சை) பெற்ற வாக்குகள் 423. லட்சுமி (அதிமுக ) 310, தங்கதுரை (திமுக) 103, செல்வம்( சுயேச்சை) 97, உள்ளிட்ட 7 பேர் போட்டியிட்டனர்.வார்டு 7 (சுயேச்சை வெற்றி) நித்தியா தேவி (சுயேச்சை) பெற்ற வாக்குகள் 599, மஞ்சுளா (காங்கிரஸ்) 329 தவமணி (அதிமுக) 83, பிரியா(பாட்டாளி மக்கள் கட்சி) 82 ,உள்ளிட்ட 5 பேர் போட்டியிட்டனர். வார்டு 8 (அதிமுக வெற்றி) நாகரத்தினம் (அதிமுக ) பெற்ற வாக்குகள் 232, தனவள்ளி (திமுக) 193 , துர்க்காதேவி (சுயேச்சை) 187, உள்ளிட்ட 7 பேர் போட்டியிட்டனர். வார்டு 9 ( திமுக வெற்றி) தேவதாஸ் ( திமுக)பெற்ற வாக்குகள் 443, நடராஜன் (சுயேச்சை )150, பிரகாஷ் (அதிமுக) 129, உள்ளிட்ட 6பேர் போட்டியிட்டனர். வார்டு- 10 (பாட்டாளி மக்கள் கட்சி வெற்றி) சூரிய பிரபா (பாட்டாளி மக்கள் கட்சி) பெற்ற வாக்குகள் 470, உமாவதி( திமுக) 378, ஹேமலதா (அதிமுக) 241, வார்டு- 11 (சுயேச்சை வெற்றி) ராஜேஷ் (சுயேச்சை) அவர் பெற்ற வாக்குகள் 240, கோபி (திமுக) 192, நாகராஜ் (சுயேச்சை) 128, முரளிராஜ் (சுயேச்சை) 87, பாஸ்கர் (அதிமுக) 61, உள்ளிட்ட 8 பேர் போட்டியிட்டனர்.

வார்டு- 12 (திமுக வெற்றி)ராமு (திமுக)பெற்ற வாக்கு 239, பாலகுமாரன் (சுயேச்சை) 183, சுரேஷ் (அதிமுக)156, உள்ளிட்ட 5 பேர் போட்டியிட்டனர். வார்டு- 13 (திமுக வெற்றி) முபாரக் அலி (திமுக) பெற்ற வாக்குகள் 276, காவேரி (சுயேச்சை) 156 ,கமலகிருஷ்ணன் (சுயேச்சை )134 ,துரைராஜ் (அதிமுக) 76, உள்ளிட்ட 10 பேர் போட்டியிட்டனர். வார்டு- 14 (சுயேச்சை வெற்றி)ஜெயந்தி(சுயேச்சை) பெற்ற வாக்குகள் 250, சிவப்பிரியா( திமுக) 249, அருணா (அதிமுக) 191 உள்ளிட்ட 6 பேர் போட்டியிட்டனர். வார்டு- 15 (திமுக வெற்றி) சாமிநாதன் (திமுக) பெற்ற வாக்குகள் 254, நடராஜன் (சுயேச்சை) 130 , கார்த்திகேயன் (அதிமுக) 114 ,உள்ளிட்ட 11பேர் போட்டியிட்டனர். வார்டு- 16 (திமுக வெற்றி) வள்ளி( திமுக) பெற்ற வாக்குகள் 461 , ஜெயந்தி (அதிமுக) 345, அபிராமி (பாட்டாளி மக்கள் கட்சி) 92 , அம்பிகா (சுயேச்சை) 92, வார்டு- 17 (திமுக வெற்றி) ரம்யா (திமுக) பெற்ற வாக்குகள் 640, பூங்குழலி அதிமுக (322) வார்டு- 18 (திமுக வெற்றி) சுப்பராயன் (திமுக) பெற்ற வாக்குகள் 443, நவநீதன் (பாட்டாளி மக்கள் கட்சி) 173, மேக்சிம் ராமமூர்த்தி( அதிமுக) 131, வார்டு- 19 (திமுக வெற்றி) ஏ. பி. எஸ். பாஸ்கரன் ( திமுக) பெற்ற வாக்குகள் 406, வினோத் (அதிமுக) 314, சரவணன்( பாட்டாளி மக்கள் கட்சி) 58, உமாமகேஸ்வரி பாரதிய ஜனதா கட்சி 25, முருகேசன் (நாம் தமிழர் கட்சி)4, வார்டு-20 (தேமுதிக வெற்றி) ராஜசேகரன் (தேசிய முற்போக்கு திராவிட கழகம்) இவர் பெற்ற வாக்கு 466, மணிவண்ணன் (அதிமுக) 195, இளங்கோவன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி) 151, அருண் பாலாஜி (அம்மா மக்கள் முன்னேற்ற கழகம்) 129, மொரார்ஜி (காங்கிரஸ்) 75, வார்டு- 21 (மதிமுக வெற்றி) முழுமதி (மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம்) இவர் பெற்ற வாக்குகள் 402, அஸ்மா நாச்சியா நாசர் (சுயேச்சை) 175 , புஷ்பா (அதிமுக) 11, விஜயகுமாரி( பாட்டாளி மக்கள் கட்சி) 10, உள்ளிட்ட 4 பேர் போட்டியிட்டனர்.

வார்டு- 22 (பாட்டாளி மக்கள் கட்சி வெற்றி) வேல்முருகன் (பாட்டாளி மக்கள் கட்சி)பெற்றவாக்கு 525 ,குகன் (திமுக) 296, வார்டு- 23 (திமுக வெற்றி) ரேணுகா தேவி (திமுக) இவர் பெற்ற வாக்குகள் 434, நீலா (அதிமுக) 194 ,சுபா (பாட்டாளி மக்கள் கட்சி) 169, வார்டு- 24 (திமுக வெற்றி) துர்கா பரமேஸ்வரி (திமுக) இவர் பெற்ற வாக்குகள் 183, திரிபுரசுந்தரி (அதிமுக) 154, சாந்தி (பிஜேபி) 58, சுமதி (சுயேச்சை) 71, உமா (பாட்டாளி மக்கள் கட்சி) 8, முன்னதாக வெற்றி பெற்ற 24 பேர்களுக்கும் உதவி கலெக்டர் கலெக்டர் நாராயணன், சீர்காழி தாசில்தார் சண்முகம் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலரும் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) இப்ராஹிம் சான்றிதழ் வழங்கினர். அப்பொழுது மேலாளர்காதர்கான்,தேர்தல் நடத்தும்உதவி அலுவலர்கள் செல்லத்துரை, சார்லஸ், பணி மேற்பார்வையாளர் பாலசுப்ரமணியன்உள்ளிட்ட பலர் உடனிருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை சீர்காழி போலீஸ் துணை சூப்பிரண்டு லாமேக் தலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிமாறன் உள்ளிட்ட ஏராளமான போலீசார் ஈடுபட்டனர்.

# சீர்காழியில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்

சீர்காழி, பிப். 25–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ்நிலையம் எதிரில் அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத்தலைவர் பாரதி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் சந்திரசேகரன், ரவிச்சந்திரன், நற்குணன், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சீர்காழி நகர கழக செயலாளர் வினோத் வரவேற்று பேசினார். விழாவில் மாவட்ட செயலாளர் எஸ். பவுன்ராஜ் கலந்துகொண்டு ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து 300 ஏழை எளிய பெண்களுக்கு சேலைகள் வழங்கினார். தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி செயலாளர் சக்தி, மாவட்ட துணை செயலாளர் செல்லையன், மு.தகவல் தொழில்நுட்ப மாவட்ட செயலாளர் நாடி. செல்வமுத்துக்குமரன் பொதுக்குழு உறுப்பினர் ஆனந்த நடராஜன், மாவட்ட நிர்வாகி ராஜமாணிக்கம், நகர பேரவை செயலாளர் மணி, நகர்மன்ற உறுப்பினர்கள் ரமாமணி, கிருஷ்ணமூர்த்தி, நாகரத்தினம், வக்கீல் பாலாஜி, ஊராட்சி மன்ற தலைவர்கள், கூட்டுறவு சங்க தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



# உக்ரைனில் பதற்றம் 22 ஆயிரம் இந்தியர்களின் நிலை கேள்விக் குறி

# தூத்துக்குடியில் பட்டாசு விபத்து: 4 பேர் பலி





# ஜெயக்குமாருக்கு ஜாமீன் கிடைத்தது ஆனால் சிறையில்தான் இருக்க வேண்டும்


சென்னை / புதுக்கோட்டை | 25.02.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.5

புதுகை வரலாறு நாளிதழ்

25.02.2022 வெள்ளி


புதுகை
வரலாற்றில் இன்று



# பிறந்த நாள்

## வேதரத்தினம் பிள்ளை

இந்திய விடுதலைப் போராட்ட
செயற்பாட்டாளர், அரசியல்வாதி



(பி. 1897) (இ. 1961)

புதுகை வரலாறு நாளிதழ்

# நினைவு நாள்

## விராலிமலை சண்முகம்

இந்தி எதிர்ப்புப்
போராட்ட
செயற்பாட்டாளர்



(பி. 1943) (இ. 1965)

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள்

# நியமிக்கப்படவுள்ளனர்

## கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

## மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.

**தொடர்புக்கு: 04322 261577**

**சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்**